**பிப்ரவரி – 05**

# TNPSC துளிகள்

- கடந்த வருட ஒதுக்கீடான 2.98 லட்சம் கோடிகளோடு ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையானது பாதுகாப்பு அமைச்சகத்திற்கான ஒதுக்கீடுகளை 6.87 சதவிகித அளவிற்கு அதிகமாக 3.18 லட்சம் கோடிகள் வரை ஒதுக்கியிருக்கின்றது.
- மகாராஷ்டிர மாநிலத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் துறையானது மகாராஷ்டிராவிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் இடையேயான விவசாய வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்கில் நாடு முழுவதிலும் ஆறு பெரிய நகரங்களில் மேலாளர்களை நியமிக்க முடிவெடுத்திருக்கின்றது.
- 2016 குடிமகன் (திருத்தச் சட்டம்) மசோதாவிற்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதுமக்கள் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் மணிப்பூர் திரைப்பட இயக்குநர் அரிபம் ஷியாம் 2006 ஆம் ஆண்டு தனக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைத் திருப்பியளித்தார்.
    - மணிப்பூரித் திரை உலகிற்கும் உலகத் திரைப்படங்களுக்கும் அவரது பங்களிப்பிற்காக முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் APJ அப்துல் கலாம் பத்மஸ்ரீ விருதை அவருக்கு அளித்தார்.
- கல்வி முறையை மேம்படுத்துவதற்காக சிக்கிம் மாநில மனிதவள மேம்பாட்டுத் துறையானது மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு இருக்கின்றது.
- பேஸ்புக்கிற்குச் சொந்தமான (முகநூல்) தகவல் அனுப்பும் செயலியான வாட்ஸ்அப் (புலனம்) நிறுவனம் இந்தியாவில் சிறு வியாபாரங்களையும் தொழில் முனைவோர்களையும் ஊக்குவிக்க "ஸ்டார்ட் அப் இந்தியா- வாட்ஸ்அப் மிகப்பெரும் சவால்" என்ற போட்டியை அறிவித்திருக்கின்றது.
- இந்தியப் பெண்கள் கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிரிதி மந்தானா நியூசிலாந்தில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் ஆட்டமிழக்காமல் அடித்த 90 ரன்களுக்காகவும், தனது நான்காவது ஒருநாள் சதத்தை அடித்ததற்காகவும் பெண்கள் மட்டையாளர்களுக்கான ஐசிசி தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்திருக்கின்றார்.
    - அவர் முதலிடத்தைப் பிடிப்பதற்காக மூன்று இடங்கள் முன்னேறியிருக்கின்றார். அவரைத் தொடர்ந்து ஆஸ்திரேலியர்களான எலிஸ் பேரியும் மேக் லேனிங்கும் உள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## சாலைப் பாதுகாப்பு நிதி

- தமிழக முதல்வர் சாலைப் பாதுகாப்பு மீதான விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு யுக்திகளை நிறைவேற்றிட 65 கோடிகள் அளவிற்கு மொத்தமாக ஒரு நிதியை ஒதுக்கியிருக்கின்றார்.
- இந்த அறிவிப்பு பிப்ரவரி 4 முதல் 10 வரை தமிழகத்தில் அனுசரிக்கப்படவிருக்கும் வருடாந்திர சாலைப் பாதுகாப்பு வாரத்தையொட்டி அறிவிக்கப்பட்டது.

- இந்த வருடம் சாலை விபத்துகள் குறைவாக இருக்கும் 3 மாவட்டங்களின் காவல் ஆணையர்கள் "முதலமைச்சரின் பதக்கம்" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்படுவர்.


# தேசியச் செய்திகள்

## பார்வையற்ற வாக்காளர்களுக்கு பிரெய்லி வாக்குச் சீட்டுகள்

- வரவிருக்கின்ற மக்களவைத் தேர்தல்களில் பார்வைக் குறைபாடு மற்றும் பார்வையற்ற வாக்காளர்களுக்கு பிரெய்லி வாக்குச் சீட்டுகள் வழங்கப்படவிருக்கின்றன.
- பிரெய்லி முறை என்பது பார்வையற்ற அல்லது குறைவான பார்வை கொண்ட மக்களால் தமது விரல்கள் உதவியுடன் தடிமனான புள்ளிகளைப் படிக்க உதவும் முறையாகும்.
- சமீபத்தில் நடந்து முடிந்த ராஜஸ்தான் சட்டமன்றத் தேர்தல்களிலும் பிரெய்லி முறையிலான வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டன.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஏற்கனவே பிரெய்லி அம்சத்தைக் கொண்டிருக்கின்றன. வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னத்தோடு இயந்திரத்தின் மீது ஒட்டப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டு பிரெய்லி முறையோடு ஏற்படுத்தப்பட்டதாகும்.
- மேலும் தேர்தல் ஆணையம் நாடு முழுவதும் உள்ள பார்வைக் குறைபாடு கொண்ட வாக்காளர்களுக்கு பிரெய்லி முறையோடு கூடிய வாக்காளர் அடையாள அட்டைகளைத் தருவதற்கும் திட்டம் தீட்டியிருக்கின்றது.

## புதிய சிபிஐ இயக்குநர்

- இரண்டு ஆண்டுகள் பதவிக் காலம் கொண்ட மத்தியப் புலனாய்வு விசாரணை அமைப்பின் (Central Bureau of Investigation - CBI) தலைவராக ஐபிஎஸ் அதிகாரி ரிஷி குமார் சுக்லா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.




- இவரது பதவிக்காலம் பிப்ரவரி 02-ம் தேதியிலிருந்து தொடங்குகின்றது. இவர் தன் பதவியை பிப்ரவரி 04-ம் தேதியன்று ஏற்றுக் கொண்டார்.

- இவர் தற்சமயம் போபாலில் உள்ள மத்தியப் பிரதேச காவல்துறை வீட்டுவசதி கழகத்தின் தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.
- ரிஷி குமாரின் நியமனம் பிரதமர் தலைமையிலான தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் ஒப்புதலளிக்கப்பட்டது.
- சிபிஐ இயக்குநர் தேர்வுக் குழுவானது பிரதமர், இந்தியாவின் தலைமை நீதிபதி மற்றும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்டதாகும்.
- சிபிஐ இயக்குநர் தேடல் குழு மத்திய ஊழல் தடுப்பு ஆணையரைத் தலைவராகவும் இதர ஊழல் தடுப்பு ஆணையர்கள், உள்துறைச் செயலாளர், அமைச்சரவைச் செயலகத்தில் உள்ள ஒருங்கிணைப்பு மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறையின் செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## மத்திய ஆப்பிரிக்க குடியரசிற்கு எதிரான தடைகளின் நீட்டிப்பு

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி வரை ஆயுதத் தடை, பயணத் தடை மற்றும் சொத்துக்கள் பறிமுதல் உள்பட தனது தடைகளை மத்திய ஆப்பிரிக்க குடியரசின் (Central African Republic - CAR) மீது நீட்டிக்க முடிவெடுத்துள்ளது.
- மேலும் இது மத்திய ஆப்பிக்க குடியரசு மீதான தடைகள் குழுவிற்கு உதவி செய்யும் நிபுணர்கள் குழுவின் பதவிக் காலத்தையும் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 29ம் தேதி வரை நீட்டித்து இருக்கின்றது.

### *மத்திய ஆப்பிரிக்க குடியரசிற்கு எதிரான தடைகள்*

- முஸ்லீம்கள் மற்றும் கிறித்துவர்கள் ஆகியோருக்கிடையேயான வன்முறை மூலம் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெரும்பான்மையான செலீகா முஸ்லீம் பழங்குடிகள் அந்நாட்டின் கிறித்துவ ஜனாதிபதியைத் துரத்தியடித்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய காலம் முதலே அந்நாடு பாதிப்பிற்குள்ளாகி வருகின்றது.
- பெரும்பாலும் கிறித்துவர்களாக உள்ள பலாகா எதிர்ப்புப் புரட்சியாளர்கள் கடுமையாக பதிலடி கொடுத்து அதனால் ஆயிரக்கணக்கானோரின் மரணங்கள் மற்றும் இடப்பெயர்ச்சி ஆகியவை ஏற்பட்டன.
- இதன் விளைவாக நிறைய மக்கள் நாட்டின் வடக்குப் பகுதியை நோக்கியும் எல்லையைத் தாண்டியும் சாட் மற்றும் கேமரூன் நாடுகளில் நுழைந்தனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## INSTEX – ஈரான் வர்த்தக மேம்பாட்டுத் திட்டம்

- ஈரான் மீதான அமெரிக்கத் தடைகளை மடை மாற்றுவதற்காக இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய மூன்று அரசுகளின் ஒரு திட்டமே "வர்த்தக பரிமாற்றங்களுக்கான ஆதரவுத் தொழில்நுட்பம்" (Instrument in Support of Trade Exchanges - INSTEX) ஆகும்.

- வாஷிங்டனின் தடைகள் மறுபடியும் விதிக்கப்பட்ட போதிலும் ஈரானை ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களோடு வர்த்தகம் செய்வதைத் தக்க வைக்க அனுமதிப்பதன் மூலம் ஈரானின் அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாக்க உதவும் ஒரு சிறப்பு பணமளிப்பு முறையே இத்திட்டமாகும்.
- இத்திட்டம் ஈரானுடன் வர்த்தகம் செய்ய விரும்பும் நிறுவனங்களிடமிருந்து எண்ணெய் இறக்குமதிக்கான கட்டணங்களை தள்ளுபடிச் சலுகைகளாகவோ அல்லது வர்த்தகத்தில் அனுமதிக்கப்பட்ட பொருட்களான உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் மூலமாகவோ பெற்றுக் கொள்ள ஈரானை அனுமதிக்கும்.
- இதன் விளைவாக ஈரானிற்கும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கும் நேரடி பணப் பரிமாற்றங்கள் எதுவும் நடைபெறாது.
- இது தொழில்நுட்ப ரீதியாக ஐரோப்பிய நிறுவனங்களை அமெரிக்கத் தடைகளிலிருந்துப் பாதுகாக்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மிலன் 2T – பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் கொள்முதல்

- நிர்மலா சீத்தாராமன் தலைமையிலான பாதுகாப்பு கொள்முதல் குழு மிலன் 2T – என்ற பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- மிலன் என்பது பிரான்சில் ஃபோன்டெனாய் ஆக்ஸ் ரோசஸ் எனும் நகரை அடிப்படையாகக் கொண்ட யூரோமிசைல் (Euromissile) எனும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு நடுத்தர வகையைச் சேர்ந்த எளிதில் இடம் மாற்றும் வகையிலான பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை ஆகும்.
- மிலன் ஆயுதக் கிடங்குகள் நீர் உட்புகாதவாறு உள்ள செலுத்துக் குழாய்களில் ஏவுகணையைக் கொண்டிருக்கின்றன.
- இந்த புதிய வகை ஆயுதம் குறிப்பாக 1990 ஆம் ஆண்டுகளில் ராணுவங்களால் பயன்படுத்தப்பட்ட எதிர்வினை ஆயுதங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் வகையில் மேம்படுத்தப்பட்டது.
- மேம்படுத்தப்பட்ட 2T ஏவுகணையால் எதிர்வினை ஆயுதங்களிலும் உள்ளே நுழைய முடியும்.




# மாநிலச் செய்திகள்

## பஞ்சாப் மாநிலம் – நீர்வாழ் விலங்கு

- பஞ்சாப் முதல்வர் கேப்டன் அம்ரீந்தர் சிங் பியாஸ் நதியில் மட்டுமே காணப்படும் ஒரு அரிதான பாலூட்டியான சிந்து நதி டால்பின்களை பஞ்சாப் மாநிலத்தின் நீர்வாழ் விலங்காக அறிவித்துள்ளார்.




- மேலும் அவர் குருநானக் தேவின் 550-வது பர்காஷ் பர்ப் (பிறந்தநாள் விழா) என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கொண்டாட்டத்தை அனுசரிக்கும் வகையில் கஞ்ச்லி ஈரநிலத்தையும் காலி பெயின் புனித நதியையும் வனவிலங்குப் பாதுகாப்புச் சரணாலயமாக அறிவிக்க ஒப்புதலளித்திருக்கின்றார்.
- மேலும் முதல்வர் கர்நாடக மாதிரியில் அமைந்த தனியார் அமைப்புகளின்

ஒத்துழைப்புடன் வன விடுதிகளை ஏற்படுத்துவதை அமலாக்கம் செய்திடவும் ஒப்புதலளித்துள்ளார்.

# முக்கிய தினங்கள்

## உலக புற்றுநோய் தினம் – பிப்ரவரி 04

- புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் அதன் தடுப்பு, கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை ஆகியவற்றை ஊக்கப்படுத்தவும் உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 04 ஆம் தேதி உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த வருடம் இத்தினம் 'நான் முயல்கிறேன் மற்றும் நான் முயலுவேன்' என்ற மூன்றாண்டு கால பரப்புரையின் வெளியீட்டினை அனுசரிக்கின்றது.




- இந்த தினமானது 2008 ஆம் ஆண்டின் உலக புற்றுநோய் தீர்மானத்தின் இலக்குகளை முறையாக பதியச் செய்வதன் மூலம் சர்வதேச புற்றுநோய்க் கட்டுப்பாட்டு ஒன்றியத்தால் (Union for International Cancer Control - UICC) ஏற்படுத்தப்பட்டது.
- இந்த தினத்தை அனுசரிப்பதற்கான முக்கிய நோக்கம் 2020 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்நோயின் தாக்கத்தையும் அதனால் ஏற்படும் மரணத்தையும் குறைப்பதாகும்.
- 2000 ஆம் ஆண்டில் பிரான்சின் பாரீசில் நடத்தப்பட்ட புற்றுநோயிற்கு எதிரான முதல் உலக மாநாட்டில் இந்த தினம் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## சர்வதேச நறுமணப் பொருள் மாநாடு 2019

- சர்வதேச நறுமணப் பொருள் மாநாட்டின் நான்காவது பதிப்பு தெலுங்கானாவின் தலைநகரமும் முத்து நகரமுமான ஹைதராபாத்தில் நடத்தப்பட்டது.
- இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் நறுமணப் பொருட்களில் 80 சதவிகிதத்திற்கு மேல் ஏற்றுமதி செய்யும் அகில இந்திய நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் மன்றத்தால் இம்மாநாடு நடத்தப்படுகின்றது.
- இம்மாநாடு அனைத்து நறுமணப் பொருட்கள் சங்கம், அனைத்து வியாபார

மையங்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், நறுமணப் பொருட்களை பயன்படுத்துவோர் மற்றும் விவசாயிகள் ஆகிய அனைவருக்கும் அவர்கள் கலந்துரையாடுவதற்கும் தொடர்பு கொள்வதற்கும் உகந்த ஒரு தளமாக கருதப்படுகின்றது.

- 2019 ஆம் மாநாட்டிற்கான கருத்துரு "மாற்றங்களின் சவால்கள், மதிப்புச் சங்கிலியை மறுவரையறை செய்தல்" என்பதாகும்.
- "மாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்புகள் மூலமாக தடைகளை சமாளித்தல்" எனும் கருத்துருவுடன் இம்மாநாட்டின் மூன்றாவது பதிப்பு ஜெய்ப்பூரில் நடத்தப்பட்டது.

- - - - - - - - - - - - - - -